**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.5037/ஆ5/2024, நாள்.12.12.2024**

*****

பொருள் பள்ளிக் கல்வி – தேசிய எரிசக்தி பாதுகாப்பு (EC) நாள் / வாரம் கொண்டாடுதல் – எரிசக்தி மன்றங்கள் (Energy club) செயல்படும் அரசு பள்ளிகளில் போட்டிகள் நடத்துதல் – தொடர்பாக

பார்வை சென்னை, தலைமை பொறியாளர், Commercial, R&D and DSM/SE/DVSM/EE/DSM/AEE 3/DSM/F, Engrgy Club –EC Day/D.265/24. Dated. 09.12.2024

*****

பார்வையில் காணும் கடிதத்தில், மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் மற்றும் தேசிய பாதுகாப்பு வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது. எரிசக்தி மன்றங்கள் (Energy club) செயல்படும் அரசு பள்ளிகளில் ஆற்றல் சேமிப்பு மற்றும் ஆற்றல் திறன் தொடர்பான போட்டிகள் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் பற்றிய விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

<u>போட்டிகள் நடத்துவதற்கான வழிகாட்டுதல்கள் –</u>

1. எரிசக்தி மன்றங்கள் செயல்படும் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் கட்டுரை போட்டி, வினாடி வினா போட்டி மற்றும் சொற்பொழிவு போட்டிகள் நடத்தப்படவேண்டும்.
2. போட்டியின் தலைப்பு – ஆற்றல் பாதுகாப்பு மற்றும் ஆற்றல் திறன் (Energy Conservation & Energy Efficiency) ஆகும்.
3. ஒவ்வொரு போட்டிக்கும் 3 வெற்றியாளர்களை தேர்வு செய்ய வேண்டும்.
4. வெற்றியாளர்களுக்கு பரிசுடன் சான்றுகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
5. ஒவ்வொரு பள்ளிக்கான வெற்றி பெற்ற மாணவர்களின் விவரங்கள் மாவட்டத்திற்கு என உருவாக்கப்பட்டுள்ள எரிசக்கி மன்றத்திற்கென உருவாக்கப்பட்டுள்ள Whatsapp குழுவில் 15.12.2024–க்குள் அனுப்ப வேண்டும்.

எனவே, எரிசக்தி மன்றங்கள் செயல்படும் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் எரிசக்தி மன்றங்களின் பொறுப்பாளர்களை கொண்டு மேற்காணும் போட்டிகளை நடத்தி ஒவ்வொரு போட்டியிலும் 3 இடங்களில் வெற்றி பெறும் மாணவர்கள் விவரம் மாவட்டத்திற்கு என உருவாக்கப்பட்டுள்ள Whatsapp குழுவில் 15.12.2024–க்குள் அனுப்புமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

12.12.24

பெறுநர் –
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்,
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.
நகல்–
மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக் கல்வி)
வேலூர் மாவட்டம்.